**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**STC.No. 2235/2024**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : கதிரவன் | **Caste** | : |
| **Father's Name** | : நந்தகுமார் | **Calling** | : பில்டிங் கான்ட்ராக்டர் |
| **Village** | : ஆலமரத்துபட்டி | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **30** |
| | | **Dated** | : **23.09.2025** |

**23.09.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திரு.கதிரவன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரிகள் ஆஜர்</u>**

நான் திண்டுக்கல் ஆலமரத்துப்பட்டியில் குடியிருந்து பில்டிங் கான்ட்ராக்டராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட நந்தகுமார் எனது அப்பா. அவர் தற்போது இறந்துவிட்டார். கடந்த 14.08.2024ம் தேதி பேகம்பூரில் உள்ள சைட்டில் நானும் எனது அப்பாவும் வேலை பார்த்து கொண்டிருந்தோம். அன்று மதியம் 3.00 மணிக்கு எனது அப்பா வத்தலகுண்டில் ஒரு கருமாதிக்கு அவரது Access 125 TN 57 2324 என்ற இருசக்கர வாகனத்தில் கிளம்பினார். நான் வீட்டிற்கு சாப்பிடுவதற்காக கிளம்பினேன். நானும் எனது அப்பாவும்

திண்டுக்கல் டு வத்தலக்குண்டு ரோடு வழியாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம். நான் எனது Splender இருசக்கர வாகனத்தில் 10 அடி துாரத்தில் பின்னால் வந்து கொண்டிருந்தேன். மதியம் 3.00 முதல் 3.15 இருக்கும் பித்தளைப்பட்டி பிரிவிற்கு முன்பு பேரிகார்டு போட்டுள்ள இடத்தில் எனது அப்பா பேரிகாட்டில் சரியாக வளைந்து முன்னே சென்று விட்டார். நானும் அவரது பின்னால் வந்து கொண்டிருந்தேன். நானும் எனது அப்பாவும் மெதுவாக தான் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். அப்போது எங்களுக்கு எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த Pluser இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் வந்தார்கள். அதை ஓட்டிய நபர் அதிவேகத்தில் வந்து கன்ரோல் பண்ண முடியாமல் வெள்ளை கோட்டை தாண்டி வந்து எனது அப்பா வந்த Access வண்டியில் நேருக்கு நேராக மோதிவிட்டார். அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட தெரியும், ஆஜர் எதிரி தான் அந்த பல்சர் இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் ஆவார். அவரை நான் சம்பவ இடத்திலேயே பார்த்தேன். அப்பாவிற்கு வலது பக்க தலை, கை, கால், வலது பக்க கால் முட்டியிலிருந்து பாதம் வரை பலத்த எலும்பு முறிவு ஆகிய இடங்களில் காயம் பட்டது. பின்னர் அக்கம்பக்கத்தினர் உதவியுடன் அங்கிருந்த ஆம்புலன்ஸில் ஏற்றி ஜேசிபி மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். எதிரிக்கும் லேசான காயம் ஏற்பட்டிருந்ததால் அவரையும் ஜேசிபிக்கு மருத்துவமனைக்கு அதே ஆம்புலன்ஸில் அழைத்து சென்றேன். போலிசார் மருத்துவமனைக்கு வந்தார்கள் நான் இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை நான் தான் எழுதினேன். புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர். எனது அப்பா ஜேசிபி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீட்டிற்கு வந்து 20 நாட்கள் கழித்து இருதய நோய் காரணமாக இறந்துவிட்டார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை ஜேசிபி மருததுவமனையில் வைத்து 14.08.2024 அன்று விசாரித்தார்கள். அதன்பின் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் அடிக்கடி கூப்பிட்டு கேட்பார்கள். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் காயம் பட்டவர் பெயரை

குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது அப்பா சாலைவிதிகளை கடைபிடித்து மித வேகத்தில் சென்றார் என புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். Splendor வாகனத்தில் நான் சென்றேன் என புகார் மற்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்வது சாலையின் மையப்பகுதி என்றால் இல்லை. ஓரமாகத்தான். வழக்கின் சம்மந்தப்பட்ட வாகனம் மற்றும் எதிரியின் விபரம் போலிசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எனது தகப்பனாரின் வயது சுமார் 56 இருக்கும் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு லைசன்ஸ் இருக்கிறது போலிசார் விசாரணையில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின் போது எனது தகப்பனார் ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் ஜேசிபி மருத்துவமனையில் சிகிச்சைக்கு 3.30 முதல் 3.45 மணிக்குள் சிகிச்சைக்கு சேர்த்துவிட்டேன். நான் பில்டிங் காண்ட்ராக்டராக 6 வருடமாகவும் எனது தகப்பனார் 30 வருடமாகவும் வேலை பார்க்கிறோம். அது தொடர்பான ஆவணங்களை போலிசார் விசாரணையில் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் எதிரி சாலைவிதிகளை கடைபிடித்து சரியாக வந்ததார்கள் என்றாலும், எனது தகப்பனார் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. மருத்துவ செலவுக்கு எதிரியிடம் பணம் கேட்டேன் என்றாலும், அவர் கொடுக்க வசதியில்லாத காரணத்தினால் அவா மீது புகார் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.10.02 10:24:32 +0530

Judicial Magistrate No.I

Dindigul.